1967 ஜுலை 7]

ஏலகிரி மலையின்மீது சாலை

* 200 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வடார்க்காடு மாவட்டம், ஏலகிரி மலையின் மீது போடப்பட்ட ரோட்டுக்காகச் செலவு செய்யப்பட்ட தொகை என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சாலை அமைக்க ரூ. 18,43,349 செலவு செய்யப்பட்டது.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்த 19 லட்சம் ரூபாய் அளவுக்குச் செலவு செய்து ரோட்டைப் போடுவதற்கான காரணம் கோடைக்காலத்தில் ஓய்வுபெறுவதற்கான ஒரு ஸ்தலமாக அமைப்பதற்காகத்தான் என்று சொல்லப்படுவது உண்மையா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நான் பொறுப்பேற்றிருக்கிற துறையைப் பொறுத்தவரை சாலையைப் பற்றித்தான் சொல்ல முடியும். ஓய்வு பெறும் இடத்தைப்பற்றி வேறு துறை அமைச்சர் அவர்கள்தான் பதில் சொல்லவேண்டும்.

ஜீப் பஸ்

* 201 வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மதிப்பிற்குரிய பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சிதம்பரம் தாலுகாவில் கொள்ளிடக் கரையில் கவரப்பட்டியிலிருந்து லோயர் அணைக்கட்டு வரையில் பொது மக்களின் சவுகரியத்தை முன்னிட்டு 'ஜீப் பஸ்' ஒன்று ஓட்டுவதற்கு அரசாங்கத்தில் திட்டம் உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அத்தகைய திட்டம் ஏதும் தற்போது இல்லை.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : இல்லையென்றால் ஒரு பஸ்ஸாவது விடத் திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அங்கு பாதை வசதி சரியாக இல்லையென்றும், சீர்படுத்த வேண்டுமென்றும் கோட்டப் பொறியாளருக்கு எழுதப்பட்டிருக்கிறது. அவரிடமிருந்து அறிக்கை வந்த பிறகு கவனிக்கப்படும்.

Small-pox in City.

* 202 *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that small-pox is rampant in the City of Madras; and

(*b*) if so, the steps taken to prevent its spread?